DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No. 29 / 2024**
**P.W. 6**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. செந்தில்குமார் |
| Father's Name | : | திரு. தங்கராஜ் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 37 |

(Accused 1 and 2 are present. A3, A4 are absent petition filed and allowed.)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of May 2026.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது வாசன் நகரில் வசித்து வருகிறேன். எனது சொந்த ஊர் சடைய நாயக்கனூர் ஆகும். நான் இந்து கவுரா நாயுடு வகுப்பை சார்ந்தவராவேன். எனக்கு அ.சா.1 செல்வி, அ.சா.2 பாஸ்கர், அ.சா.3 சுப்ரமணி, அ.சா.4 சந்திரசேகர், அ.சா.5 பழனியப்பன் ஆகியோர்களை தெரியும். அவர்கள் எந்த சாதியை சேர்ந்தவர்கள் என்று எனக்கு தெரியாது. முதல் எதிரி மற்றும் 2வது எதிரி எனது பெரியப்பா ஆவார்கள். ஆஜர் ஆகாத எதிரிகள் பாப்பாத்தி மற்றும் சின்னமணியை தெரியும். அவர்களும் எனது உறவினர்கள் ஆவார்கள். எனக்கு சம்பவம் தெரியாது. சம்பவ காலக்கட்டத்தில் நான் கேரளாவில் வேலை பார்த்து வந்தேன். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரிக்கவில்லை.

| |
|---|
| **அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க வேண்டுகோள் விடுக்கப்பட்டது. சாட்சியின் முந்தைய வாக்குமூலத்தை பரிசீலத்து பாரதிய சாட்சிய அதினியம் பிரிவு 157–ன் கீழ் அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.** |

**குறுக்கு விசாரணை ( அரசு தரப்பில்)**

போலீசார் விசாரணையில் கடந்த 30.11.2022 அன்று பகல் மணி 3.00 மணி அளவில் நில அளவையர் அளந்து விட்டு சென்ற போது அ.சா.1 செல்வி மற்றும் அவரது குடும்பத்தினர் அவர்கள் இடத்தில் கல் ஊன்ற குழி தோண்ட ஆரம்பித்த போது எதிரிகள் அவர்களை சாதி பெயரை சொல்லி திட்டி அடித்து காயப்படுத்தினார்கள் என்றும் சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்று சொல்லி எதிரிகள் என்னுடைய சாதியை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை** (எதிரிகள் தரப்பில்)

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Adobe

DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
Spl.S.C.No. 29 / 2024
P.W. 7

| | | |
|---|---|---|
| Name | : | திரு. பதியநாதன் |
| Father's Name | : | திரு. லூர்க்காஸ் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 69 |

(Accused 1 and 2 are present. A3, A4 are absent petition filed and allowed.)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of May 2026.

**முதல் விசாரணை**

நான் மணப்பாறை, சாமியார் தோப்பில் வசிக்கிறேன். நான் விவசாயம் செய்கிறேன். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதியம் சுமார் 3.00 மணியளவில் நானும், பொன்னுசாமியும் இருக்கும்போது ஒரு உதவி ஆய்வாளரும், ஒரு காவலரும் வந்து கையொப்பம் வாங்கினார்கள். அதில் நானும், பொன்னுசாமியும் படித்து பார்த்து கையொப்பம் செய்தோம். பார்வை மகஜரிலுள்ள எனது கையொப்பம் **அ.த.சா.ஆ.2** ஆகும். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

| |
|---|
| **அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க வேண்டுகோள் விடுக்கப்பட்டது. சாட்சியின் முந்தைய வாக்குமூலத்தை பரிசீலத்து பாரதிய சாட்சிய அதினியம் பிரிவு 157–ன் கீழ் அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.** |

Approved

**<u>குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)</u>**

போலீசார் விசாரணையில் காவல் துணை கண்காணிப்பாளர் 1.12.2022ம் தேதி மதியம் 3.00 மணியளவில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயாரித்தபோது அதில் நானும், பொன்னுசாமியும் கையொப்பம் செய்தோம் என்று சொல்லிவிட்டு, தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Adobe